உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஆண்டு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஆண்டு வைகாசிமீ கo-உ வெள்ளிக்கிழமை (24 - 5 - 1974) [இல: அ

# சேக்கிழார் குருபூசை



“முந்திய முதல்நடு இறுதியுமானாய் மூவரும் அறிகிலா யாவர் மற்றறிவார்’ என மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானுடைய பெருமையைப் பாராட்டியுள்ளார். அத்தகைய பெருமான் அடியாருள்ளத்தில் ஒடுங்கியுள்ளனர். அடியார்களுடைய பெருமையும் அளவிடற்கரியது. அடியார் பெருமையை உலகுக்கு அளந்து காட்டியவர் சேக்கிழார் சுவாமிகள்’

சைவ பரிபாலன சபையார் சேக்கிழார் பெருமானுடைய குருபூசையை நாவலர் மண்டபத்தில் 26-5-74 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவார்கள. ஸ்ரீமத், ம, சுப்பிரமணியக் குருக்கள் சிவபூஜா மண்டபத்தில் சிவ பூசை புரிந்து குருபூசையை ஆரம்பித்து வைப்பார்கள். அடுத்து சேககிழார் நாயனர் புராண படனம் நிகழ்ந்தபின் நடராஜப் பெருமானுக்கும் நால்வருக்கும் விசேட பூசை நிகழும். அன்னம்பாலிப்புடன் குருபூசை பூர்த்தியாகும்.

## சமய பாடப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை இவ்வாண்டு கார்த்திகை 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இதற்கான பாடவிதானம் ஆகியன சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன

தவிர்க்கமுடியாத காரணங்களால்

## சைவ மாநாடு

ஆனிமாதம் நடுப்பகுதிக்குப் பின்போடப்பட்டிருக்கின்றது.

— செயலாளர்
சைவ பரிபாலன சபை

## பொங்கல் விழா

கோண்டாவில் ஞான வைரவர் கோவில் பொங்கல் விழா எதிர்வரும் 28-5-74 செவ்வாய் கிழமையன்று நடைபெறும் 28-ம் திகதி பகல் விசேட அபிடேகம் நடைபெறும் இரவு 6.00 மணி முதல் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். அதிகாலை 4-30 மணிக்கு பொங்கல் ஆரம்பமாகும்.

## சிவநெறி வளர்க்க திருஞானசம்பந்தர் திரு அவதாரஞ் செய்தனர்

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

“நாட்டில் இன்று எழுந்துள்ள பல குழப்பங்களும் அகன்று மக்கள் மகிழ்வோடு வாழவேண்டுமானால் கடவுள் துணைவேண்டும்” என்று தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் சீகாழியம்பதியில் நடைபெற்ற திருமுலைப்பால் விழாவில் ஆசியுரை வழங்குகையில் கூறினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மேலும் ஆசியுரை வழங்குகையில், சமய உலகம் மகிழ்ச்சியோடு கொண்டாடத்தக்க தனிப் பெருந் திருநாள் இன்றைய நாள், ஞானசம்பந்த பெருமான் உமையம்மை அளித்த சிவஞானப்பாலை உண்டு, உலகம் உய்யத் “தோடுடைய செவியன்” என்று அடியெடுத்துத் தேவாரம் பாடத் தொடங்கி சிவநெறி விளக்கம் செய்ய முற்பட்ட திருநாள் ஆகும்.

இன்றைய நட்சத்திரம் திருவாதிரை, திருஞானசம்சமபந்தர் திரு அவதாரம் செய்ததும் திருவாதிரை, திருமுலைப்பால் உண்டருளிய திரு நாளும் திருவாதிரை; 27 நட்சத்திரங்களில் “திரு, என்ற அடைமொழிசேர்த்து வழங்கும் நட்சத்திரங்கள் இரண்டு, ஒன்று திருவாதிரை, இது சிவபெருமானுக்குரிய நட்சத்திரம், “ஆதிரை நாளுகந்தான்” என்று அப்பர் அடிகள் குறிப்பிடுகின்ருர். பிறிதொரு நட்சத்திரம் திருவோணம், இது திருமாலுக்குரியது, திருவாதிரை அனல்வடிவமாக விளங்கும் நட்சத்திரம், திருவோணம் தண்மையுடையதாய் விளங்கும் நட்சத்திரம், “பொங்கு அழலுருவனக விளங்கும் சிவபிரானுக்கு — திருவாதிரையும், தண்ணிய அலைகடலில் துயிலும் திருமாலுக்குத் திருவோணத்தையும் இணைத்துக் கூறுவர், அப்பனும் அம்மையுமாக விளங்கும் இவ்விரு தெய்வங்கட்கும் வில்வமும் துளசியும் விருப்பான பத்திரங்கள், வில்வம் — தங்கச் சத்துள்ளது, துளசி — வெள்ளிச் சத்துள்ளது. இவ்வாறெல்லாம் இந்நாட்டில் இரண்டு பெரிய சமயத்தெய்வங்களுக்குரிய நட்சத்திரங்களுக்கு “திரு” என்ற அடைமொழி கொடுத்துப் போற்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## இன்ப நிலையெய்தற்கு வழி

திரு. சோ. க. வேலாயுதர்
கொழும்பு

முற்றொடர் – 2.

வாழ்க்கையில் அறவழிகளைக் கடைப் பிடித்து ஒழுகுகின்ற ஒழுக்கமே சிறந்தது. எக் கருமத்தையும் விருப்புடன் பிறர் தீமைகளை மேற்கொள்ளாது, குற்றங் குறைகளைப் பாராட்டாது, மனச்சான்றுப்படி செய்தலே அமைவுடைத்து. தங்கருமம் செய்பவரே தவஞ் செய்பவராகும். தவமும் தவமுடை

வளர்ச்சி 4-ம் பக்கம்

## அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் சேக்கிழார் விழா

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் ஒன்பதாவது சேக்கிழார் விழாவும், குருபூசையும் 26—5—74 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் மன்ற ஆதரவில் சேக்கிழார் குருபூசை 26 5 74 அன்று காலை 9 மணிக்கு இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் ஆரம்பமாகும். பூசையை அடுத்து இந்துக் கல்லூரி மாணவர்களின் திருமுறை ஓதல் இடம்பெறும். அதையடுத்து, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் திருமுறையோதல் நிகழ்ச்சி 8-15 மணி முதல் 9-55 மணிவரை நடைபெறும். 9-55 முதல் 10-15 வரை திரு மு. ஞானப்பிரகாசம் அவர்களின் சொற்பொழிவு இடம்பெறும்.

கொக்குவில் த. குமாரசாமிப் புலவர் அவர்களது

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## சைவ மாண்பு

— [ சித், சிவரத்தினம் ] —

(முன் வளர்ச்சி –5)

யாழ்ப்பாணச் சமய நிலை என்ற நூலில் 1872 இல் நாவலர் வெளியிட்ட கருத்து இக்காலத்துக்கும் ஏற்றதொன்ருகும். பாதிரியார் நாவலரை நன்கு உணர்ந்து கொண்டவர். பாதிரியார் அக்காலத்தில் நாவலருக்குக் கூறிய கருத்து ‘தலைக்கு மேலே கைகாட்டும் தமிழருக்காகக் கதறிக் கதறி மண்டைவெடித்துச் சாவீர்கள்’ என்பதாகும். அதற்கு மறுமொழி கொடுப்பது போல வெளியிட்ட கருத்து “ஓகோ இவ் யாழ்ப்பாணத்திலுள்ள சமயக் குருமார் கருத்து தத்தஞ் சமயபத்தியை வளர்த்தலினிடத்தன்று, தத்தம் வயிறு வளர்த்தலினிடத்ததேயாம்” என்ற கருத்துக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தெரிவித்த கருத்தும் கவனிக்கற்பாலதாகும்.

“சமயம் சித்துலக சாத்திரம் ஆகமீகமானது அது. சூக்குமமான காரண காரியத் தொடர்புடையது. அத்தொடர்பு தெரியாதவர்கள் அது பற்றி எழுதலாம், படிக்கலாம்” என்ற நிலை இன்று நேர்ந்திருக்கிறது. இது இலக்கியத்துக்கும் பொருந்தும்,

நல்லைநக ராறுமுக
நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## கலைத்துறைக்கு பெருமிழப்பு

வண்ணார்பண்ணையில் சைவசமயத்துக்கும் தமிழ் மொழி விருத்திக்கும் பெருந் தொண்டாற்றிய சைவ உயிர்குடியிற் றோன்றிய இசைச் செல்வி ஸ்ரீமதி நவரத்தினம் மகேஸ்வரியம்மையர் 22-5-74 ல் அன்று சிவபதமடைந்தனர். கலை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள் அம்மையாரின் அன்புக் கணவனவர். இருவரும் கலை வளர்ச்சிக்கு நமது நாட்டிலாற்றிய பணியை யாவரும் அறிவர், அம்மையார் தமிழ் நாட்டில் இசை பயிற்சி பெற்றவர் இரவீந்திராத்தாகூரால் நிறுவப்பட்ட சாந்தினிகேதனம் என்ற கல்வி சாலையிலும் பயின்றவர்.

இவர் இந்நாட்டில் பல பிள்ளைகளுக்கு இசைப்பயிற்சியளித்ததுடன் சில கல்லூரிகளிலும் இசைக்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றியவர் கலைப்புலவரின் தொண்டு சிறப்பதற்கு அம்மையார் பெருமுதவி புரிந்தனர். அம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## பதில் அதிபர் பதவி இறக்கர்

### தமிழ்ப் பெற்றோர் கவலை

அட்டன் சென் ஜோன் பொஸ்கோஸ் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டிருந்த சிங்கள அதிபருக்குப் பதிலாக இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் முதல் அதிபராக திரு. நேசதுரை நியமிக்கப்பட்டனர். அவர் கடமையேற்கச் சென்றவிடத்தில் அவருக்கு உதவி அதிபர் பதவியே குறிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இந்நியமனம் தமிழ் பெற்றோர்களிடத்தில் மனக்கிலேசத்தையும் நம்பிக்கைக் குறைவையும் உண்டுபண்ணிவிட்டது. பெருபான்மைத் தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் ஒரு கல்லூரிக்கு தமிழ் ஆசிரியர் ஒருவரை நியமிப்பது நீதியாகும்.

பெற்றோர் குழுவொன்று நுவரெலியா தேசியப் பேரவை உறுப்பினர் திரு. காமினி ஆரியசிங்காவைச் சந்தித்து தமிழர் ஒருவரை அதிபராக நியமிக்கும்படி விண்ணப்பஞ் செய்தது. அதன் விளைவாக பட்டதாரியான திரு. நேசதுரையை பதில் அதிபராக நியமிக்கும்படி நுவரெலியாக் கல்வித் திணைக்களம் உத்தரவளித்ததாம். திரு. நேசதுரை பதவி ஏற்கச் சென்றபொழுது அங்கு கடமையாற்றிய சிங்கள அதிபர் மறுத்துவிட்டனராம். உதவி அதிபர் என்ற பதவியை அவருக்கு வழங்கப்பட்டபொழுது திரு. நேசதுரை அதனை மறுத்துவிட்டனராம். இந்நியமனம் தமிழ் பெற்றோர்களிடத்தில பெருந் துன்பத்தையும் கலககத்தையும் உண்டு பண்ணிவிட்டது.

## சிவநெறி வளர்க்க

1ஆம் பக்கத்து வளர்ச்சி

றப்படுவதைக் காணலாம் என்றும் கூறினார்.

புராண வரலாறுகள் போலவே சமய மரபுகளும் சமுதாய நன்மைக்கு அமைக்கப்பெற்றன, ஆட்சி வசதிகட்கு ஏற்ப நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை செய்வதற்கு வசதியாக வயல்கள் வரம்புகள் அமைக்கப் பெற்றுப் பிரிக்கப்பெற்றுள்ளன. அதுபோல சமுதாய வளர்ச்சிக்கும் நடைமுறைக்கும் சாதிப்பாகுபாடுகள் அமைந்துள்ளன. சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளாக இவர்கள் பிரிந்து தங்களுக்குள் வேறுபாடின்றிக் காழ்ப்புணர்ச்சியின்றி முன்னேற்றம் பெற்று உய்ந்தனர், ஆசாரம் - சீலம் - நாகரிகம் - பண்பாடு இவற்றால் மக்கள் இனவழி பிரிந்து சமுதாயத்தில் ஒன்றுபட்டுவாழ்ந்தனர், மேல் நிலையில் உள்ளவர்களுக்கு - சிவஞானியர்களுக்குச் சாதி வேற்றுமை இல்லை, மொழி - நாட்டுவேற்றுமைகள் இல்லை, யாதும் ஊரே யாவரும் கேளிர் (சுற்றத்தார்) என்ற கொள்கை உடையவர்கள் அவர்கள், ஞானசம்பந்தர் பாடும் பாடல்களுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணர் அருகில் இருந்து யாழ் வாசிக்கும் பணியைசெய்து வந்தார், "அந்தணரில் மேம்பட்ட அப்பூதியடிகள் வேளாண் குலத்தில் வரித்த அப்பர் அடிகளைத் தெய்வமாகப் போற்றினார்" என்பதைப் பெரியபுராணம் கூறுகிறது, உலகியல் நிலையில் இப்பிரிவுகள் சமுதாய அமைப்பு வளர்ச்சிகளுக்கு ஏற்படுத்தப்பட்டன, ஆனால் இன்று அப்பிரிவுகள் அமைக்கப்பெற்ற நோக்கம் மாறிவிட்டது, உயர்வு - தாழ்வு வேற்றுமைகள் உருவாகிவிட்டன, காழ்ப்புணர்வு மக்களிடையே தோன்றி உண்மையை மறைத்து விட்டது இந்நிலைமாறி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு உயரவேண்டும்

ஆசியுரையைத்தொடர்ந்து வழங்குகையில் தெய்வ நம்பிக்கையும் பக்தி உணர்வும் மனிதனை மேலும் மேலும் உயர்த்துவன, அஸ்திவாரமில்லாத கட்டடம் ஊற்றில்லாத கிணறு - மணமில்லாத மலர் சிறப்படைய முடியுமா? அது போலக் கடவுள் உணர்வு இல்லாத வாழ்வு எவ்வாறு சிறப்புறும் சட்டாத்தால் சாதிக்க முடியாதைச் சமயம் சாதிக்கிறது சமயநெறி மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது ஏற்றத் தாழ்வுகளை அகற்றுகிறது புண்ணிய பாவங்கள் என்ற பெயரால் மனிதன் தீய செயல்களை விலக்கி நல்ல செயல்களை மேற கொண்டு வாழத்துணை புரிகிறது, அச்சுறுத்தியும் வற்புறுத்தியும் சட்டம் சாதிப்பதைச் சமயம் எளிமையாகச் சாதிக்கிறது கடவுள் அருள் இல்லாமல் மனிதன் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைபெறச் செய்தல் இயலாது இதை உணர்த்தும் புராண வரலாறுகள் பல [illegible] என்றும் கூறினார்கள்.

## நாவலர் பிள்ளைத்தமிழ்

**ஆக்கம்: — "பழைய பாணி" —**

(முன் வளர்ச்சி — 31)

ஆறுவது: - வாரானைப் பருவம்.

சத்யபூ ஷணவருக! தர்மபோ ஷணவருக!
சைவதௌ லேஷிகள் தாம்
தத்தமள வுண்ணின்று தட்டுளுப் புற்றுண்மை
தலைகீழ்ப் படுத்துமாயும்
மித்னயதூ ஷணவருக! மிருதுபா ஷணவருக!
விதியிக ழுநாசார நோய்
விலக்குபே ஷணவருக! விரத்யபீ ஷணவருக!
மிக்கெழும் பொய்ப்ரவாக
நித்யசோ ஷணவருக! நீதிகோ ஷணவருக!!
நேர்மையெனு மேர்கடாவி
நிகரிலற வித்திட்ட நேயநீர் பாய்ச்சியொளிர்
நிஷ்களங் கத்தவாழ்வு
மெத்துசமு கத்துவிளை வெய்தவுழை வேளாண்மை
**வீறுகுல் முதல் வருகவே!**
மெய்ச்சேவை மணிமுடியி லச்சினையெனவொளிர்
**வீரவிறல் வேள் வருகவே!** (10)

(அடுத்த இதழில் வளரும்)

## அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ஆசியுரை 10 - 45 மணி வரை இடம்பெறும். இதனைத் தொடர்ந்து வடமராட்சி மகளிர் கல்லூரி மாணவிகள் திருமுறைஓதல் 11-15 மணிக்கு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்திலிருந்து (செய்யுள் 514 - 572) புராண படனம் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் வித்துவான் க. கி. நடராஜன் B. O. L அவர்களும், க. சொக்கலிங்கம் B. A அவர்களும் கலந்து கொள்வார்கள். நண்பகல் 12-00 மணிக்கு பூசை, தேவாரம், பிரசாதம் வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகளுடன் குருபூசை விழா நிறைவுறும்.

மாலை 5 00 மணிக்கு வண்ணை வைத்தீசுவரன் கோவிலிலிருந்து சேக்கிழார் திருவுருவப்பட ஊர்வலம் ஆரம்பமாகி இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தை வந்தடையும். மன்றத் தலைவர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் சேக்கிழார் விழா ஆரம்பமாகும்.

சங்கீதபூஷணம் அ. சோமசுந்தரம் அவர்களது தேவாரம், க. சொக்கலிங்கம் அவர்களது வரவேற்புரை, துணைச் செயலாளரது ஆண்டறிக்கை, சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மாணவிகளது திருமுறை ஓதல், ஆகியன தலைமையுரை இடம் பெறும்.

**நூல்அரங்கேற்றம்**

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் செயலாளரும் சிவதொண்டன் ஆசிரியருமாகிய வித்துவான் க. கி. நடராசன் B. o. L. அவர்கள் எழுதிய "சிவயோகசுவாமிகள் திருச்சரிதம் புகழ்ப்பாமாலை" நூல் அரங்கேற்றம் 6-50 மணி முதல் 8 30 [illegible] சுந்தரம் அவர்கள் வெளியிட்டுரை, பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள் ஆய்வுரையை அடுத்து க. சொக்கலிங்கம். வித்துவான் க. கார்த்திகேசு, சட்டத்தரணி நம சிவப்பிரகாசம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இ. சபாலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்

சிவநெறிப்புரவலர் க. கனகராசா, S. R. கந்தையா, த. சண்முகலிங்கம், நா. க. மயில்வாகனம், து. மகேந்திரா, ச. செல்வராசா, K. கனகசபாதி, சி. விசுவலிங்கம், டாக்டர் க. கனகரத்தினம் ப. க. தம்பிமுத்து ஆகியோர் நூலின் முதற் பிரதி பிரதிகளைப் பெறுவர்.

நூலாசிரியர் பதிலுரையை அடுத்து ச. விநாயகமூர்த்தி அவர்கள் சிறப்புரை நிகழ்த்துவார்கள் சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா அவர்களின் நன்றியுடன் விழா நிறைவெய்தும், ——

## குருநாகல் சைவமகாசபை 45 ஆவது வருடாந்தக் கூட்டம்

குருநாகல் சைவ மகாசபையின் நாற்பத்தைந்தாவது ஆண்டு நிறைவுக் கூட்டம் 16-5-74 வியாழக் கிழமை மாலை சபை மண்டபத்தில் நடைபெற்றது சபையின் நாற்பத்தாறுவது ஆண்டுக்குரிய பின்வரும் புதிய நிர்வாகத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர் வைத்தியகலாநிதி ஆ சுப்பிரமணியம் உப-தலைவர்கள் திரு செ. ஞானதீபம் திரு. கு. குமரப்பெருமாள், திரு க. சிவஞானசுந்தரம், வைத்திய கலாநிதி க. குகதாசன், வைத்தியகலாநிதி வ. வரதராஜன்

கௌவர செயலாளர் திரு. க. தர்மலிங்கம் உப செயலாளர் திரு ஆ. க. நடராசா கௌரவ பொருளார் திரு, செ, விக்னேஸ்வரமூர்த்தி உப பொருளாளர் திரு. த. வடிவேலு விடுதி அதிபர் திரு. ந வைத்தியநாதன் நூல் நிலையப் பொறுப்பாளர் திரு. ஆ. அருளானந்தம் நிர்வாக சபை உறுப்பினர் திருவாளர்கள் மு. கனகரத்தினம், குலசிங்கம், வ. சுப்பையா, மூ. சீ. கந்தப்பு பொ. ஜெகதீசன், க. நவரத்தினம், த. இராசரத்தினம் மு. இராமலிங்கம், த. இராசமாணிக்கம். ——

## தமிழ் மாநாடும் சமயபாட வகுப்பும்

திருதருமபுரம் ஆதீன 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், ஆதீன குரு முதல்வரான ஸ்ரீ ல ஸ்ரீ குரு ஞானசம்பந்தரின் குருபூசை விழாவை முன்னிட்டு, யூன் 1ம் திகதிமுதல் 11ஆன் நாள் முடிய திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டையும் யூன் 1ஆம் நாள் முதல் 10 ஆம் நாள் முடிய கோடை கால சமயபாட பயிற்சி வகுப்பையும் நடத்தி வைப்பார்கள்.

யூன் 10 ஆம் நாள் குரு பூசை விழாவும் 11ம் நாள் இரவு பட்டணப் பிரவேசக் காட்சியும் நடைபெறும்,

-(எமது சிதம்பரம் நிருபர்

## சைவ மரபு

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்களெங்கே
பிரசங்கமெங்கே
ஆத்த னறி வெங்கே யறை.

## நாவலர் இலட்சியம்

சீர்பூத்த கருவிநூல்
உணர்ச்சி தேங்கச்
சிவப்பூத்த நிகமாக
மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய
விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை
பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத்
தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப்
பிரானுர் தந்த
வாபூத்த அறிவிச்சைத்
தொழிலென் றேதும்
மதம்பூத்த விநாயகன்று
வணங்கி வாழ்வாம்,

இன்று நாம் செய்ய வேண்டிய பணிகளாவன: நாவலர் வெளியிட்டுதவிய முதலாம், இரண்டாம் சைவ வினாவிடைகள், திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண வசனம் ஆகிடன சமயபாடத்துக்காக உபயோகிக்க வேண்டும். தமிழ் அறிவிக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நிகண்டு முதலியனவும், நாவலர் இயற்றிய இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், பாலபாடங்கள் ஆகியன இன்றைய கல்வி உலகில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது நீங்க வேண்டும். இந்நூல்களாலே தான் தமிழுக்கும், சைவத்துக்கும் ஆக்கமேற்படும், நாவலர் பெயராலே வாழ்கின்ற நம் மக்கள் சிந்திதுச் செடலாற்ற முன் வருவார்களாக? ——

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கார்த்திகேசு தில்லையம்பலம் கைம்பெண் சிவபாக்கியம் —வழக்காளி

இல. M. B. 12443 எதிராக

யாழ்ப்பாணம், நல்லூர், கோவில் ரோட்டு 103/1

(1) பூரணம் சுப்பிரமணியம்

(2) நாகராசா இராசலட்சுமி — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12443-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1974 ம் ஸ்ரீ ஜூன் ஆனி மாதம் 21-ம் திகதி (21-6-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை,- முதல் வட்டி ரூபாய் 7217/-ம்; இதில் ரூபாய் 5000/-க்கு 29—4—1971 திகதி தொடக்கம் 1—3—1972 திகதி வரைக்கும் 100க்கு 12% வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும்வரைக்கும் 100க்கு 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 511 - 15 சதம்

### ஆதனங்களின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறை அம்புடுவெளி நிலப்பரப்பு 1½ ம் பயிர்களும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் கிழக்கெல்லைக் காணியின் வடக்கெல்லையருகாக கிழக்கேயிருக்கும் கையொழுங்கைக்கு போக்குவரவு உரிமையும் செய்யும் உரித்தும் எல்லை கிழக்கு இராமலிங்கம் செலலத்துரை பெண் பாக்கியத்தின்ஆதனம் வடக்கு குறித்த கையொழுங்கை மேற்கு பூரணம் சுப்பிரமணியத்தின் ஆதனம்தெற்கு எஸ். சுப்பிரமணியம் பெண் நாகம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் முற்பதிவு D 339/5

2 மேற்படி நல்லூரிறை அம்பொழுவெளி நிலப்பரப்பு மூன்றும் (3-ம்) கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு சரவணமுத்து நாகலிங்கத்திற்கும் பங்காளருக்கும்முரிய ஆதனம வடக்கு சப்பாபதி செல்லப்பாவின் ஆதனம் மேற்கு குளம தெற்கு எஸ் சுப்பிரமணியத்திற்கும் பெண் கனகம்மாவின் ஆதனம் இதடங்கலும் இன்னும் வடக்குப் பக்கமாக கிழக்குக் காணிக்குப் போகும் பாதையுரித்தும்

முற்பதிவு D 59/117

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

கொமிஷனர் & விலைமதிப்பாளர்

தெல்லிப்பளை

18-4-74

50 24

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல ஈடு: 13055

1, கந்தையா தர்மபாலனும் பெண் 2: மகேஸ்வரியும் இருவரும் சுண்டிக்குளி யாழப்பாணம் வாதிகள்

எதிராக

1. கந்தையா கிருஸ்ணரும் பெண் 2. யோகநாயகியும் இருவரும் அச்சுவேலி வடக்கு (மடத்தடி) அச்சுவேலி -பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈட்டு வழக்கு இல 13055 படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974-ம் ஸ்ரீ ஆனி மாதம் 24-ம் திகதி (24-6-74) திங்கட்கிழமை காலை 9-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 2,230-ம் 3-4-72 தொடக்கம் 4-12-72 வரைக்கும் ரூபா 1200 க்கு நூற்றுக்கு வருடம் 10 வீதவட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருடம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 402 ம் 20 சதமும் இதில் 1-2-73 ல் ரூபா 150- கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி வடக்கு இறை ஆவளை நி பர. 6 குளி 7 கிணறும் கல்வீடும், எல்லை கிழக்கு சின்னா கந்தசாமிக்குரிய ஆதனம் வடக்கு கணபதிப்பிள்ளை கதிர்காமசேகரத்துக்குரிய ஆதனம், மேற்கு வேலன் ஞானிக்கும் பங்காளருக்குரிய ஆதனம் தெற்கு முத்தன் செல்லத்துரைக் குரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும் ஒழுங்கையும் இதில் சொரியலாய் நிலத்தில் நி. ப. 2 (இரண்டும்) குறித்த கல்வீட்டில் சொரியலாய் அரைவாசியும் மேலும் தெற்கேயிருக்கும் ரோட்டிலிருந்து இக் காணிக்கு வரும் ஒழுங்கைப் பாவிப்புரித்தும்

அ. சிவானந்தன்

கொமிஷனர் & விலைமதிப்பாளர்,

Commissioner, Valuer

'நித்தியகல்யாணி'

பலாலி ரோட்,

திருநெல்வேலி வடக்கு,

யாழ்ப்பாணம், 20-5-74,

48 24-8

---

## அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் சைவ இளைஞர் சங்கம்

ஷை சங்கம் அண்மையில் சிவநாம பஜனை ஓதும் போட்டி ஒன்றினை நடத்தியது. இப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டு பரிசுகளும் வழங்கப்பெற்றன.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

(1) வைரமுத்து பாலசுப்பிரமணியமும் மனைவி

(2) மனோன்மணியும், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

இல M B 11538 எதிராக — வழக்காளிகள்

கந்தராசா குருக்கள் சாம்பசிவக் குருக்கள் —எதிராளி

செம்மணி ரோட், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 11538 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆூ ஆனி மாதம் 28ம் திகதி (28-6-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 7020/-ம், 10 - 8 -70 தொடக்கம 12-1-71 வரைக்கும் ரூபா 5000/-க்கு வருஷம் நூற்றுக்கு 10 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 465ம் 86 சதமும் இதில் ரூபா 500/- தவிர்த்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் "நாயன்மார்குளத்து வளவு நிலப்பரப்பு வரகுச் செய்கை 3ம் (3 Lms V.C) நாயன்மார் குளம் வடக்கு வரகுத்தறை" நிலப்பரப்பு வரகுச்செய்கை 4 (4 Lms. V.C.) இதில் தெற்குப் பக்கமாக வரகுச் செய்கை ஒன்றும் (1 Lms. V.C.) இரண்டும் ஒன்று சேர்ந்து நிலப்பரப்பு வரகுச் செய்கை 4 (4 Lms. V.C.) வடக்குக் காணிக்கு வடக்கேயுள்ள காணியில் உள்ள கிணற்றில் பங்கும் அவ் வடக்குக் காணிக்கூடாக வழி வாய்க்கால் உரித்தும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு:- ரோட்டு; வடக்கு:- சங்கரப்பிள்ளையின் கைம்பெண் செல்லம்மாவுக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு:- ஒழுங்கையும் S. இராமநாதனின் உரிமைக்காரர்களின் ஆதனம், தெற்கு:- கனகசபை சுந்தரம். சிவக்கொழுந்து ஐயாத்துரை, சுப்பர் நடராசா ஆகியோருக்கும் வைரவகோவிலுக்குமுரிய ஆதனங்கள்.

பதிவு D 319/85

'நித்தியகல்யாணி"

பலாலி ரோட்,

திருநெல்வேலி வடக்கு.

யாழ்ப்பாணம். 10-5-74

அ. சிவானந்தன்,

கொமிஷனரும்,

விலை மதிப்பாளரும்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல: M B 13135

வெற்றிவேலு நாகநாதரின் மகள் ஜெயலட்சுமி தற்போது கொழும்பு எதிராக

1. முகம்மது ஐதுறூஸின் கைம்பெண் சுல்தான் மொகிய தீன் நாச்சியா அல்லது குளந்தை உம்மா 2 முகம்மது ஐது றூஸ் சாகுல் சமீத் இருவரும் ஜினு ரோட்டு வண்ணர் பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13135 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974 ம் ஆூ ஆனி மீ 26 ம் திகதி (26-6-74) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபாய் 7525 ம 25-5-72 தொடக்கம் 11-5-73 வரைக்கும் ரூபாய் 5000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும் வரை முழுவதற்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 570-20 சதமும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர் பண்ணைக் கோவில் பற்று வண்ணர் பண்ணை தென் மேற்கு இறை கற்குளம் கரை வரகுச்செய்கை நிலப் பரப்பு 11ம் 1 3/16 குளிகளும் (D 141/121 ன் கீழ் பதிவு பெற்றது) இது உத்தரவு பெற்ற உலாந்தா C. C குமாரசாமியினுல் 24-2-59 ல் அழந்து தயாரிக்கப்பட்ட 162 ம் இலக்கப் படத்தில் D 257/29 ன் கீழ் பதிவு பெற்ற 6 பரப்பும் 1 3/16 குளியும் (6 LM,S 1 3/16 KLS. V.C) கொண்ட ஒருதுண்டுக் காணியும் அதேபடத்தில் D 210/288 ன் கீழ்பதிவு பெற்ற 5 பரப்பும் (5LMS V.C) கொண்ட அடுத்த துண்டுமாய இரண்டு துண்டுக் காணிகளாலாயது மேலும் இது 11 பரப்பும் 4.8 குளிகளும் உடையதாய் காணப்படும் இதில் வடக்குப்பக்கமாகப் பிரிக்கப்பட்டு விலைப்பட்ட 9 பரப்பையும் (9LMS VC) நீககி மிஞ்சிய 2 பரப்பும் 4.8 குளிகளும் (2 LMS 4-8 KLS VC) கொண்டதுண்டுக்காணியும் அதிலுள்ள வீடுகளும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு ஐதுறூசின் உரிமைக் காரரின் ஆதனம் வடக்கு சுல்தான் மொகிடீன் கட்சியாரின் பெண் சுலைகா உமமாவின் ஆதனம் மேற்கு ஒழுங்கையும் காதிர் மோகிடீனின் பெண் நயினு முகம்மது நாச்சியாவின் ஆதனமும் தெற்கு அப்துல் கரீமின் உரிமையாளரினதும் மற்றையோரினதும் ஆதனம்! (D346/137) ன் கீழ் பதிவு பெற்றது,

க. சரவணமுத்து

கொமிசனரும் விலைமதிப்பாளரும்

9 செட்டித்தெரு நல்லூர்,

யாழ்ப்பாணம்

46 24-5 15-5-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M. B 8930

(1) துரைசாமி கனகலிங்கமும்

(2) பெண் இராசமணியும்

ரெம்பிள் ரோட், நல்லூர்

—வழக்காளிகள்

எதிராக

சரவணமுத்து கந்தையா,

புத்தூர். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 8930 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974 ம் ஸ்ரீ (ஆனி)மீ 19-ந் திகதி (19-6-74 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 2650/-ம, 15-3-1967 தொடக்கம் 15-9-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 250 - 99 சதமும்.

### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெறகு இறை "அளவெடடை" "பெரும் கண்ணன் சீமழுத்தானடைப்பு" வரகுச் செய்கை நிலப்பரப்பு 21 (Lms V. C.)ம், பயிர்களும் கிணறும மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும் எல்லை கிழக்கு:- சோமாஸ்கந்தர் அன்னசததிரம் ஆதனம், வடக்கு:- சிவசம்பு சிற்றம்பலமும்மறுபேரினதும் ஆதனம், மேற்கு:- புத்தூர் விசுவநாத கோயில்; தெற்கு:- விசுவநாதர் சின்னப்பிள்ளையினதும் மறுபேரினதும் ஆதனம்.

K. 236/286ன் கீழ் பதிவு பெற்றது.

க. சரவணமுத்து

கொமிசனரும் விலைமதிப்பாளரும்

9, செட்டித்தெரு,

நல்லூர், யாழ்ப்பாணம்.

9-5-74 45, 24-5

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

ஈடு வழ. இலக்கம். 13608

கந்தசாமி சத்தியநாதன், யாழ்ப்பாணம். — வாதிகள்

எதிராக

(1) செல்லர் துரைசிங்கமும் பெண்

(2) தங்கச்சிப்பிள்ளையும். பலாலி. — பிரதிவாதிகள்

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13608ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1974-ம் ஸ்ரீ ஆனி மீ 27ம திகதி (27—6—74) வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு முதலாம் காணியும், இரண்டாம் காணி முற்பகல் 11 மணி தொடக்கமும் அந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6400/-ம் 19-1-73 தொடக்கம் 17-7-73 வரைக்கும் ரூபா 5000/-க்கு வருடம் ரூ. 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருடம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 555 - 85 சதமும்

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று பலாலி இறை

(1) 'பூமத்தன் சீமாவும் நரசிங்க வெண்ருனுயரமும்' நிலப்பரப்பு 5ம் குளி 15 இதில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு 2ம் குளி 16½யும் இதற்கு எல்லை கிழக்கு:- இராமன் சீனியனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு:- இராயப்பு கைம்பெண் மரியம்மாவின் ஆதனம், மேற்கு:- பொதுப் பாவிப்புக்காக விடப்பட்ட ஒழுங்கை, தெற்கு:- நல்லான் கைம்பெண் அம்மினியின் ஆதனம். இதடங்கலிலும்.

(2) பூமத்தன் சீமா நிலப்பரப்பு 14 வீடுகளும், பனைகள், தென்னைகளும், கிணறும், எல்லை கிழக்கு:- ரோட்டு வடக்கு:- சூசை ஆசீர்வாதத்தினதும் வழியும், மேற்கு:- ஒழுங்கை, தெற்கு:- பொன்னம்பலம் கயிலாயபிள்ளையின் ஆதனமும், நல்லான் கைம்பெண் அம்மினியின் ஆதனமும், இது அடங்கலிலும் நிலத்திலும் பயிர்வகைகளிலும் சொரியலாய் பதினுலில் ஒரு பங்கும், (1/14) மேற்கே வடக்கடைய இருக்கும் கல்வீடு நிந்தமாகவும்.

"நித்தியகல்யாணி"

பலாலி ரோட்.

திருநெல்வேலி வடக்கு,

யாழப்பாணம். 20-5-74

அ. சிவானந்தன்

கொமிஷனர் & விலை மதிப்பாளர்

49, 24—5

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல்
வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துய ர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஷு வைகாசி மீ ௧0-உ வெள்ளிக்கிழமை [1974]

## வீதி விதிமுறையும் விபத்துக்களும்

மக்கள் தொகை மதிப்புக்கடங்காது பெருகிக் கொண்டே வருகின்றது என்று மாநிலமெங்கும் புள்ளி விபரங்கள் புலப்படுத்துகின்றன. ஆனால் வாழ்க்கைக் குரிய வசதிகளும் அவ்வாறு வளமாக விரிவடை கின்றனவா என்றால் இல்லை என்றே கூறுதல் வேண்டும்.

எங்கள் நாட்டின் போக்குவரத்து அமைப்பு நூற்றாண்டுகள் பல கழிந்துபோன பின்னும் முன் போலவே இருக்கின்றது. யாழ் நகரிலிருந்து காங் கேசன்துறைக்குச் செல்லும் வீதி குடிசனப் பெருக் கின் தேவைக்குகந்ததாயில்லை என்பதை யாவரு மறிவர். வீதி ஒடுங்கிவருவதல்லாமல் விசாலிக்கப்படு வதரிது. இவ்வளவில் இருந்தாலும் காரியமில்லை, இதற்கிடையில் வீதிகளிலே தடைகளை மக்கள் அமைக்கின்றனர். மரக்காலைகள் முன் பெரும் தண் டுகள் வீதியோரங்களிற் குவிக்கப்படுவது சாதாரண மாய்விட்டது. கற்கும்பிகள், வீழ்ந்த மரங்கள் என் றின்னன தடைகளைவிட, மூடக்குகளில் வாகனங்க ளும் நிறுத்தப்பெறுகின்றமையால் வீதிகளில் விபத் துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இதற்கு யாது செய்யலாம் என்று மக்கள் தங் களையே கேட்டுக்கொள்ளுதல் வேண்டும். அரச ஒழுங் குகளைக் காப்பாற்றுங் கடமை மக்கள் வாழ்க்கை யோடியைந்திருத்தல் அவசியம் என்று நாம் கருது கின்றோம். பாடிகாவலரும் இதைக் கவனிப்பது முறையாகும்.

## சிவானந்த குருகுலம்

திருக்கேதீச்சரத்தில் ஸேர். கந்தையா வைத்திய நாதன் அவர்களுடைய முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சைவ சமயக் குருமார் பயிற்சிச்சாலையை இக் காலப் பொருளாதார நெருக்கடியையும் மாணவர்களுடைய வச திக் குறைவுகளையும் முன்னிட்டு அங்கு நடாத்த முடி யாத நிலை ஏற்பட்டுவிட்டது. அப்பயிற்சிச்சாலையை நிரு வகித்து வருகின்ற கொழும்பு இந்து மாமன்றம் அதனை யாழ்ப்பாணத்தில் இம் மாதந் தொடக்கம் நடத்தத் தீர் மானித்துள்ளது. மாணவர்களுக்கு இலவசமாக சமஸ் கிருதமும் தமிழ் மொழிப் பயிற்சியும் வேத சிவாகமப் பாடங்களும், சைவசித்தாந்தம், திருமுறைகள் புராணங் கள் முதலிய பாடங்களும் போதிக்கப்படும். இப் பாட சாலைக்குரிய பாடத் திட்டத்தை வகுத்தல் ஆசிரியர்களை நியமித்தல் முதலிய ஒழுங்குகளைப் புரிய வித்வச் சபை யொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பிரம்மஸ்ரீ கா. கைலாச நாதக் குருக்கள், பிரதிஷ்டா பூஷணம் ஐ. கைலாசநாதக் குருக்கள், வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி சீதாராமசாஸ்திரி நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ க. சுப் பிரமணிய சாஸ்திரி, வேதாகம பூஷணம் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ விசுவநாதக் குருக்கள் சித்தாந்த ஞானபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் முதலியவர்கள் ஷெ வித்வத்சபை யில் அங்கம் வகிக்கின்றனர். வித்வத் சபையினருடைய தீர்மானங்களின்படி சைவக் குருமார் பயிற்சிச்சாலையை நிருவகிப்பதற்கு ஒரு நிருவாகக் குழுவும் நியமிக்கப்பட் டுள்ளது. அதன் தலைவராகக் கோப்பாய் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மாவும் காரியதரிசியாக சுன்னாகம் பிரம்மஸ்ரீ ப. வித்தியானந்த சர்மாவும் கடமை புரிவார்கள்.

பயிற்சிச்சாலையின் பிரதமாசிரியராக பிரம்மஸ்ரீ க. சுப்பிரமணியசாஸ்திரி கடமையாற்றுவார். கல்வியறிவும் அநுபவமும் வாய்ந்த பெரியோர்கள் ஆசிரியர்களாக நிய மிக்கப்படுவார்கள்.

இக் காலம் நமது நாட்டிலுள்ள கோவில்களில் நடக்கி ன்ற நித்திய பூசைகள் உற்சவங்கள் முதலிய கருமங் களைப் புரிகின்ற சைவசமயக் குருமார்கள் பெரும்பாலும் போதிய குருத்துவக் கல்வி யுடையவர்யளாகவும் முறைப் படி ஆன்மார்த்த பூசை சந்தியாவந்தனம் முதலிய சற் கருமங்களை வேதாகம முறைப்படி புரியாதவர்களாகவும் காணப்படுகின்றார்கள். மக்களிடையே சைவ சமய ஒழுக்கம் சைவசமய அறிவு பெரிதும் குன்றி வருவதற்குச் சைவ சமயக் குருமார்களுடைய தகுதிக் குறைவே முக் கிய காரணமாகும். குறித்த குருமார் பயிற்சிச்சாலை செவ் வனே நடைபெற்று வருதல் சைவ சமய அபிவிருத்திக் குப் பெருந்துணை புரியும்.

சைவ சமய குருவகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இப் பயிற்சிசாலையில் சேர்ந்து தங்கள் தங்கள் குருத்து வக் கல்வியைப் பயின்று தங்களுக்கும் நாட்டிற்கும் நல னைத் தேடுவார்களாக.

வையகம் துயர்தீர திருஞான சம்பந்த மூர்த்திநாய னார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரம் 20 செய்யுட் களில் முதற் பாட்டை 'வாழ்க அந்தணர்' என ஆரம் பித்தமைக்குக் காரணம் அந்தணர்களுடைய தவவாழ்வே நாட்டினது துன்பத்தைத் துடைக்குமென்பதற்காக வென்பதையும் நாம் மறக்கவொண்ணாது.

"வையகமுந் துயர் தீர்கவே"

ஓ
சிவமயம்

## சைவபரிபாலன சபையின் 13ம், 14ம், 15ம் வருட ஆவேதனம்.

( முன் வளர்ச்சி — 3)

### சைவ பரிபாலன சபையின் விதானங்கள்

1. பெயர்: இந்தச் சபை "யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை" என்று அழைக்கப்படும்.

2. உத்தேசம்: இச்சபையின் உத்தேசம் சைவசமயவிருத்தி யும், இதற்குச் சாதனமாகிய கல்விவிருத்தி முதலியனவுமாம்.

3. அங்கத்தவர்: இச்சபையின் விதானங்களுக்கிணங்கி நடக் கச் சித்தமுள்ள ஒவ்வொரு சைவசமயியும் இதன்கீழுள்ள ஆறாம் விதானத்தின்படி ஏற்படுத்தப்படும் நிருவாக சபையாரது அனு மதியோடு சபைக்கு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்படத் தகுதி யுடையவராவர் இங்ஙனந் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவரெல் லாரும் மகாசபையாரென்று அழைக்கப்படுவார்கள்.

4. சபை உத்தியோகஸ்தர்: இம்மகாசபையாருள் ஒருவர் இச் சபைக்கு அக்கிராசனராயும் ஒருவர் அல்லது இருவர் உபஅக்கிரா சனராயும் ஒருவர் இலேகராகவும் ஒருவர் அல்லது இருவர் உதவிஇலேகராகவும் ஒருவர் தனாதிகாரியாகவும் ஒருவர் அல்லது இருவர் சபையின் கணக்குப்பரிசோதகராயும் மகாசபையின் வரு டாந்தக்கூட்டம் ஒவ்வொன்றிலும் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

5. அதிகாரசபை: இச்சபையின் உத்தேசம் முழுவதும் மேற் குறித்த சபையாரால் வருஷந்தோறும் வரிக்கப்படும் அதிகாரசபை யாரால் நடத்தப்படும். இந்த அதிகாரசபையாரே இச்சபைக் குரிய திரவியத்துக்குப் பொறுப்பாளிகள். அதிகாரசபையிலே மேற் சொல்லிய மூன்றும் விதானத்திற் கூறிய அக்கிராசனர் முதலிய உத்தியோகஸ்தர் உட்பட அறுபது பேருக்கு மேற்படாமலும் இருபத்துநாலு பேருக்கு உட்படாமலும் உள்ள தொகையினர் வரிக்கப்படுவார்கள்.

6. நிருவாகசபை: அதிகாரசபையார், தம்முள்ளே மேற் சொல்லிய உத்தியோகஸ்தர் உட்பட இருபத்துநான்கு பேருக்கு மேற்படாத தொகையினரை ஓர் நிருவாகசபையாக ஏற்படுத்தி இதன்கீழுள்ள ஏழாம் விதானத்திற் சொல்லியபடி வேண்டிய விதானங்களை யுண்டுபண்ணிக் கொடுத்து அவற்றின்படி அந்நிரு வாகசபையார் மூலமாகச் சபையின் விவகாரங்களை நடத்துவார்.

7. விதானங்கள்: அதிகாரசபையார் தங்களுடைய பராமரிப் பின் கீழுள்ள சபைகள், வித்தியாசாலைகள் முதலிய சகல ஆதி னங்களையும் நடத்துவதற்கு வேண்டிய விதானங்களை, இவ்விதானங் களுக்கு மாறுபடாமற் காலத்துக்குக்காலம் உண்டுபண்ணிக் கொள்ளலாம்,

8. அக்கிராசனர்: இச்சபையின் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரே மகாசபை, அதிகாரசபை, நிருவாகசபை கூடும் வேளைகளிலெல்லாம் சபாநாயகமாயிருத்தல்வேண்டும். இவர்களுள் ஒருவராவது வராதிருக்கும்பக்ஷத்தில் அத்தருணம் சமுகமாயிருக் கும் அங்கத்தவர்கள் தங்களில் ஒருவரை அக்கூட்டத்திற்குச் சபா நாயகமாகத் தெரிந்து கொள்ளலாம்.

(அடுத்த இதழில் வளரும்)

## இன்ப நிலை......

(1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

யாருக்குத்தானே கைகூடும்

நம் வாழ்வில் நன்றுந் தீதும் பிறர்தரவாரா நாம் நம் நலத்துடன் பிறர் நலத் திலும் சேவையிலும் ஈடுபட வேண்டும் பரநலம் கருதி னோரே பாரினிற் போற்றப் படுகின்றனர் குடும்ப நலம், கிராம நலம், மாநில நலம், தேசநலம், உலக நலம் என வாழ்வு விரிந்து பரந்து வளர வேண்டும் அப்பொழுது தான் நாம் உடல் எடுத்தத னால் ஏற்படுகின்ற நலனை எய்தியவர்களாவோம்.

நாம் எப்பொழுதும் இள மையோடும், அழகோடும், உடல் வலிவோடும் வாழ நினைந்தாலும் மூப்பு வரும் பொழுது இவையெல்லாம் எம்மைவிட்டு அகலவே செய் கின்றன. நமது வாழ்வை குறுகச் செய்கின்ற வாளா கவே நாட்கள் கருதப்படு கின்றன. எனவே வாழ்க் கையானது எப்பொழுது எவ்வாறு முடியும் என எவ ராலும் கூறமுடியாது, ஆனால் எப்படியாவது ஒரு நாளைக்கு காலன் வந்தே தீருவான். இதற்கு விதி விலக்குக் கிடையாது. அர சனோ ஆண்டியோ யாவரும் காலபாசத்தை கடக்கவிய லாது என்பதை துணிந்து கூறலாம். எனவே, அந்த நாள் வரும்வரை நாம்,

"எல்லாப் படியாலும்
எண்ணினாலிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்
புன்குரம்பை — நல்லார்
அறிந்திருப் பராதலினால்
ஆங்கமல நீர்போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு"

என்ற மூதுரைக் கிணங்க வாழ்தல் வேண்டும் எத் தொழிலைச் செய்தாலும் எத வத்தைப் பட்டாலும் எந்த நேரத்திலும் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும் நடந்தாலும், மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும் இமைத்தாலும் - மன்றாடும் மலர்ப்பாதத்தே மனதை ஈடு படுத்தியிருத்தல் சாலச் சிறப் புடையதாகும் இதனையே அரன்றன் பாதமறந்து செய் அறங்க ளெல்லாம் வீண் செயல் எனவும் அரனடிக் கன்பிலாதார் செய்கின்ற புண்ணியமும் பாவமாகும் அன்புடையார் செய்கின்ற பாவமும் புண்ணியமாகும் எனவும் மெய்கண்ட சாத் திரமும் கூறுகின்றது.

நாமெல்லாம் சதா ஏதோ பணி புரிந்து கொண்டே தான் இருக்கின்றோம்.
"அன்பர் பணிசெய்ய
என்னை ஆளாக்கிவிட்டு
விட்டால்
இன்பநிலை தானே
வந்தெய்தும் பராபரமே"
என தாயுமானசுவாமிகளும்,
"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என பணியே பயின்றிருந்து பரமனடிமற வாத திருநாவுக்கரசு சுவாமி களும் பணியின் சிறப்பினை பன்னியிருக்கின்றனர். பற் றற்ற பணிபுரிந்தால் பரமன் பாதம் கிட்டும். இதுவே சும்மா இருக்கும் நிலையுமா கும். சும்மா இருத்தல் சோம்பியிருத்தல் அன்று.

(வளரும்)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 24—5—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மு. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org